# MCOP No.52/2021

**தேதி- 18.09.2025**

**பெயர் : திரு. கிருபாகரன், த/பெ. மூர்த்தி**

**எ.ம.சா.1 24.07.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய டிவைர் திரு. எஸ். தமிழ்ச்செல்வன், என்னுடைய வாகனம் TN 23 AX 1530 அசோக் லைலேண்ட் வண்டியை சரியான பாதையில் மோட்டார் வாகன சட்ட திட்டங்களுக்குட்பட்டு ஆரன் அடித்துக் கொண்டு சாலையின் இடது புறமாக சரியாக ஓட்டிச் சென்றார் என்றும், அப்போது எதிரில் வந்த மனுதாரரின் மகன் அன்பு என்பவர் ஓட்டி வந்த TN 23 CS 2585 Hero Splendor Plus என்ற இரு சக்கர வாகனத்தை விபத்து ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று கூறியிருக்கிறேன் என்றால் கூறியிருப்பது சரிதான்.

மனுதாரரின் மகனின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்று சொல்லியுள்ளேன் அது சரிதான். என்னுடைய ஓட்டுநர் தமிழ்ச்செல்வன் என்பவர் பெயரில் எந்த தவறும் இல்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த பிறகு இன்சூரன்ஸ் கம்பெனிக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் தகவல் தெரிவித்தேன். எப்படி தகவல் கொடுத்தேன் என்றால் போன் மூலமாக தகவல் கொடுத்தேன். இன்சூரன்ஸ் போட்ட ஏஜெண்டுக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன்.

இன்சூரன்ஸ் கம்பெனிக்கு நேரடியாக தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஏஜெண்டுக்கு போன் செய்தேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.7 என்னுடைய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஆவணத்தில் அவருக்கு கனரக வாகனங்கள் இயக்குவதற்கான தகுதி இல்லை

என்றால் ம.சா.ஆ.7 ஆவணத்தின் அசலை பார்த்து தான் கொடுத்தேன். ம.சா.ஆ.7 ஆவணத்தின் படி கனரக வாகனங்களை இயக்குவதற்கு தகுதி இல்லை என்றாலும், அவ்வாறு அதில் குறிப்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் Batchக்கு அப்பளை செய்துள்ளதாகவும், ம.சா.ஆ.7 ஆவணத்தின் அசலை காண்பித்ததாலும் நான் என்னுடைய வாகனத்தை ஓட்டுநரிடம் கொடுத்தேன்.

என்னுடைய ஓட்டுநருக்கு கனரக வாகனங்களை இயக்குவதற்குண்டான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், நான் என்னுடைய ஓட்டுநரிடம் வாகனத்தை ஒப்படைத்தது தவறு என்றாலும் சரியல்ல. மேற்கண்ட காரணத்தினால் இன்சூரன்ஸ் கம்பெனி எந்தவித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றாலும், நான் தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. இன்சூரன்ஸ் கம்பெனியை பொறுத்த வரை தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.